# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜூலை 6, 2024 | Weekly E-paper • July 6, 2024


## மல்லிகார்ஜுன கார்கேயின் திராவிடக் குரல்!

சுப. வீரபாண்டியன்



### புதிய குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெறுக!

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

### பொய் பொய்தான்!

தலையங்கம்

### ஐயா வே. ஆனைமுத்து அவர்கள்!

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூலை 6, 2024 Weekly E-paper ● July 6, 2024


# மல்லிகார்ஜுன கார்கேயின் திராவிடக் குரல்!

சுப. வீரபாண்டியன்

இரண்டு நாள்களுக்கு முன்பு, இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் நடைபெற்றுள்ள ஒரு விவாதம், சமூக நீதியையும், ஜனநாயகத்தையும் தலைகுனிய வைத்திருக்கிறது!

மாநிலங்களவையை வழிநடத்திச் செல்லும் அவைத் தலைவரான, இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் பேசியுள்ள சில சொற்களும், அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கொடுத்துள்ள பதிலடியும் இந்திய வரலாற்றில் இனி என்றும் பதிந்து கிடக்கும்!

ஒரு விவாதத்தில், முன்னாள் அமைச்சரான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜெயராம் ரமேஷ் குறுக்கிட்டுப் பேசிய போது, அவைத் தலைவர் தன்கர் அதற்குத் தேவையில்லாமல் ஒரு விவாதத்தை எழுப்பி இருக்கிறார்.

ஜெயராம் ரமேஷைப் பார்த்து, "நீங்கள் மிகச் சிறந்த அறிவாளி, மிகுந்த திறன் உடையவர். நீங்கள் அல்லவா இந்த இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும் " என்று கார்கே அமர்ந்துள்ள இடத்தைக் காட்டிப் பேசி இருக்கிறார். அதாவது நீங்கள்தான் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்குத் தகுதியானவர் என்பது போன்று ஒரு குறிப்பு அது!



ஒரு கட்சியின் தலைவராக யாரை அமர்த்தலாம் என்பதை அந்தக் கட்சிதான் முடிவு செய்யும். நீண்ட அனுபவமும், சமூக நீதிச் சிந்தனையும் கொண்ட மல்லிகார்ஜுன கார்கே இப்போது மாநிலங்களவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து வருகிறார். அவரை இழிவு படுத்துவது போல, ஜெயராம் ரமேஷைப் பார்த்து, நீங்கள்தான் அந்த இடத்திற்குத் தகுதி உள்ளவர் என்று அவைத் தலைவர் சொல்வது எந்த விதத்திலும் நாகரிகமாகாது!

அதற்கு உடனடியாக, மல்லிகார்ஜுன கார்கே கொடுத்துள்ள பதிலடி மிகச் சிறப்பானது. அவைத் தலைவர் தன்கரைப் பார்த்து, இது உங்கள் வேலை அன்று. எங்கள் கட்சிக்குத் தலைவரை நீங்கள் முடிவு செய்ய முடியாது. நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அவர் பிறப்பால் பிராமணர், நான் பிறப்பால் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவன். எனவே அந்த வருணாசிரமமும், சனாதனமும் உங்கள் மூளையில் அப்பிக்கிடப்பதைத்தான் இந்தப் பேச்சு காட்டுகிறது என்று கூறி இருக்கிறார்!

இல்லை, இல்லை நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை என்று அவர் சொன்னார், அவர் மூளையில் அந்த அழுக்குதான் அப்பிக் கிடக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிந்து விட்டது!

இந்த தன்கர் சில ஆண்டுகளுக்கு முன்பு, எனக்கு அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலேயே நம்பிக்கை இல்லை என்று சொன்னவர் தான். அதனை இரண்டு நாள்களுக்கு முன்பு, மக்களவையில் பேசிய ஆ.ராசா எம்.பி குறிப்பிட்டுக் காட்டினார். அது இப்போது உண்மை என்று ஆகிவிட்டது!

வருணாசிரமத்திற்கும், சனாசனத்திற்கும் எதிரான திராவிடக் கருத்தியலின் குரல் கார்கேயின் மூலம் நாடாளுமன்றத்தில் ஒலித்திருக்கிறது. அவருக்கு நம் நன்றியும், பாராட்டும்!

●

## உள்நோக்கமுள்ள

# புதிய குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெறுக!

**வழக்கறிஞர் இராம. வைரமுத்து**

இந்திய தண்டனைச் சட்டம் 1860, குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 மற்றும் இந்திய சாட்சியங்கள் சட்டம் 1872 ஆகிய மூன்று குற்றவியல் சட்டங்களுக்கும் மாற்றாக கடந்த ஆண்டு பாஜக அரசு கொண்டு வந்த பாரதிய நியாய சன்ஹிதா (BNS) 2023, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS) 2023 மற்றும் பாரதிய சாக்ஷியா அதினியம் (BSA) 2023 என்ற மூன்று சட்டங்கள் ஜூலை ஒன்றாம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த போது புதிய குற்றவியல் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் இவை குறித்த ஆக்கப்பூர்வமான விவாதம் எதுவும் நடைபெறவில்லை. நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் எழுப்பிய சந்தேகங்களும், சட்ட அறிஞர்கள், வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்கள் சங்கங்கள் மற்றும் நீதிபதிகள் சுட்டிக் காட்டிய குறைபாடுகளும் சரி செய்யப்படாமலேயே புதிய குற்றவியல் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதால் அதைஎதிர்த்து பல்வேறு தரப்பினரும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.



புதிய குற்றவியல் சட்டங்கள் இயற்றப்படுவதற்கான தேவை எதுவும் எழாத சூழலில் பா.ஜ.க அரசு உள்நோக்கத்துடன் இந்த சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. பழைய சட்டங்களில் இடம்பெற்றிருந்த 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட அம்சங்கள் புதிய குற்றவியல் சட்டங்களில் மீண்டும் இடம் பெற்றுள்ளது. இதற்கு பதிலாக ஏற்கெனவே நடைமுறையிலிருந்த சட்டங்களில் கால மாற்றங்களால் தேவைப்படாத சட்டப்பிரிவுகளை நீக்குவது, புதிய சட்டப்பிரிவுகளை சேர்ப்பது போன்ற திருத்தங்களை மட்டும் மேற்கொண்டு அதே சட்டங்களையே நடைமுறையில் வைத்திருக்கலாம். அதை விடுத்து பா.ஜ.க அரசு செய்திருக்கும் இந்த முயற்சியை சட்டத்துறையில் இந்தி மற்றும் சமஸ்கிருதத்தை திணிக்கும் சூழ்ச்சியாகவே பார்க்க வேண்டியுள்ளது. இந்திய ஒன்றியத்தில் 9 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் மட்டுமே இந்தி அலுவல் மொழியாக உள்ளது. 56.37 சதவிகித இந்தியர்கள் இந்தி அல்லாத பிற மொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 348(1) இல் உச்ச நீதிமன்றத்திலும், ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திலும் நடக்கும் அனைத்து நடவடிக்கைகளும், நாடாளுமன்றத்தில் அல்லது ஒரு மாநிலத்தின் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அனைத்து சட்ட முன்வடிவுகள் அல்லது திருத்தங்கள், நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அனைத்துச் சட்டங்கள் மற்றும் குடியரசுத் தலைவர் அல்லது ஒரு மாநிலத்தின் ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்ட அனைத்து ஆணைகள் மற்றும் இந்த அரசியலமைப்பின் கீழ் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து உத்தரவுகள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் துணைச் சட்டங்கள் ஆகிய அனைத்தும் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து சமஸ்கிருத மொழியில் பெயர் சூட்டப்பட்டுள்ள புதிய குற்றவியல் சட்டங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானவை என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

புதிய குற்றவியல் சட்டங்கள் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கூட்டுப் பட்டியல் - 3 இன் கீழ் வருவதால் மாநில அரசுடன் விரிவான ஆலோசனை நடத்திய பிறகே இவை இயற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் குறைந்தபட்சம் மாநிலங்களின் கருத்துகளைக் கூட கேட்காமல் இந்தச் சட்டங்கள்

தொடர்ச்சி அடுத்தப் பக்கம்...

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பொய் பொய்தான்!

நடந்து முடிந்த நாடாளுமன்றக் கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் கூர்மையான பேச்சுக்குப் பதில் சொல்வதற்குப் பதில் பொய்களை அள்ளி இரைத்திருக்கிறார் பிரதமர் மோடி.

அவருடைய 10 ஆண்டுகால 'நல்லாட்சியைப்' பார்த்து மீண்டும் பாஜகவை வெற்றிபெறச் செய்திருக்கிறார்களாம் மக்கள், சொல்கிறார் மோடி.

நாடாளுமன்றத் தொகுதிகள் மொத்தம் 542. அதில் 2019ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பாஜக பெற்ற தொகுதிகள் 303. இப்போது 2024 தேர்தலில் அது பெற்ற தொகுதிகள் 240. அதாவது 63 தொகுதிகளை பாஜகவிடம் இருந்து பிடுங்கி விட்டார்கள் மக்கள். ஆட்சி அமைக்க 272 உறுப்பினர்கள் பலம் இல்லாமையால், ஆந்திராவின் தெலுங்கு தேசக் கட்சி, பீகாரின் ஐக்கிய ஜனதா தளம் ஆகிய கட்சிகளின் தயவுடன் சிறுபான்மை அரசின் பிரதமராக அவர் அமர்ந்து இருக்கிறார் என்பதை மறைத்து, மக்கள் அமோக வாக்களித்தார்கள் என்று கூசாமல் பொய் பேசியிருக்கிறார் மோடி.

மணிப்பூரில் கலவரம் ஏற்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும், இன்னும் அங்கே பிரதமர் என்ற முறையில் ஒரு தடவை கூட செல்லாத மோடி, எதிர்க்கட்சிகள். தான் அதைத் தூண்டுவது போலப் பேசியிருக்கிறார். மணிப்பூரில் அமைதி திரும்ப பாஜக ஒன்றிய/மாநில அரசுகள் என்ன நடவடிக்கைகள் எடுத்தன என்பதை மக்களவையில் சொல்லி இருக்கலாமே! இது வெறும் 'சாம்பிள்' தான்.

பா.ஜ.க வும், அதன் கொள்கையும், நடைமுறையும், அமைச்சரவையும், பொய்களும் எதுவும் மாறவில்லை. சொல்லப் போனால்:-

புதிய தொன்னை ; ஆனால் பழைய 'கள்'.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்க தொடர்ச்சி...


இயற்றப்பட்டிருப்பதாகக் கூறி தமிழ்நாடு அரசு இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கடுமையாக எதிர்க்கிறது. அத்துடன் BNS மற்றும் BNSS சட்டங்களின் பல்வேறு பிரிவுகள் தெளிவற்றதாகவும், முரண்பாடுகள் கொண்டதாகவும் இருப்பதை தமிழ்நாடு அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய குற்றவியல் சட்டங்களில் தேசத்துரோகம் என்பது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக "இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிப்பது" குற்றமாக சேர்க்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்படும் அம்சங்கள் தெளிவற்றவையாக இருப்பதால் இப்பிரிவு கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. அரசுக்கு எதிரான எதிர்ப்புகளை முடக்க இப்பிரிவு பயன்படுத்தப்படும். தேசத்துரோக குற்றத்திற்கு முன்பு அதிகபட்சமாக மூன்று ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் இப்போது அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வரை விதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் சாதாரண போராட்டங்களைக் கூட அரசுக்கு எதிரான செயல்பாடாகக் காட்டி ஒருவரைக் கைதுசெய்ய முடியும்.

புதிய சட்டங்கள் காவல் துறைக்குக் கூடுதல் அதிகாரங்களை அளிக்கிறது. லலிதா குமாரி எதிர் உத்திரப்பிரதேசம் மாநிலம் வழக்கில் உச்சநீதிமன்றம் "ஒரு குற்றம் நடைபெற்றதாக புகார் எழுந்தால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும்" என்று தீர்ப்பளித்துள்ளது. ஆனால் ஒரு குற்றம் நடந்திருக்கிறதா என்பதை உறுதி செய்ய BNSS காவல்துறைக்கு 14 நாட்கள் அவகாசம் அளித்துள்ளதால் அது வரை முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யாமல் இருக்க முடியும்.

காலனிய ஆதிக்க மனநிலையிலிருந்து விலகுவதற்காகத் தான் புதிய குற்றவியல் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசு கூறினாலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களை விட கொடூரமானதாக இந்த புதிய சட்டங்கள் இருக்கிறது என்பதே உண்மை. ஆகவே புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து வழக்கறிஞர்கள் நடத்தி வரும் போராட்டங்களில் மக்களும் தீவிரமாக பங்கேற்க வேண்டும். அனைவரின் கருத்துகளுக்கும் மதிப்பளித்து ஒன்றிய அரசு புதிய குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெறவேண்டும்.

# ஐயா வே. ஆனைமுத்து அவர்கள்!



ஐயா வே.அனைமுத்து அவர்கள் இன்றைய மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் 8 ஆகத்து 1976 அன்று சேலம் அ.சித்தையன், சீர்காழி மா. முத்துச்சாமி, ஆ.செ. தங்கவேலு, ந. கணபதி, தக்கோலம் கா.ந.ஜநநாதன் ஆகிய தோழர்களின் துணையுடன் 'பெரியார் சம உரிமைக் கழகம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். அவ்வமைப்பு 13 மார்ச் 1988 அன்று 'மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி' எனப் பெயர் மாற்றப்பட்டது.

1978-இல் ஒன்றிய அரசுக் கல்வியிலும், வேலையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு கோரி அன்றைய குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியிடம் நேரில் கோரிக்கை வைத்தார். அத்துடன் உத்தரப் பிரதேசம் முசாபர் நகரில் பிற்படுத்தப் பட்டோர் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அதன் விளைவாக பீகார் மாநிலத்தில் முதன் முறையாகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20% ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

1991 இல் தில்லியில் பெரியார் பிறந்தநாள் விழாக்களையும், பிற வடமாநிலங்களில் பெரியார் கொள்கைப் பரப்புரைகளையும் முன்னெடுத்தார்.

1996 இல் திருக்குறள் மாநாட்டை நடத்தினார். பெரியார் பற்றிய சொற்பொழிவு மற்றும் ஆய்வுக்காக மலேசியா சென்றார். வட இந்தியாவின் 30 மாவட்டங்களில் இடஒதுக்கீட்டை ஆதரித்துப் பரப்புரை செய்தார்.

ஐயா ஆனைமுத்து அவர்கள், 21 சூன் 1925 ஆம் ஆண்டு பிறந்தவர். அவரின் நூற்றாண்டு இப்பொழுது தொடங்குகிறது என்பதை நினைவு கொள்வோம். 2021 ஏப்ரல் 6 அன்று அவர் இயற்கை எய்தினார்.

இணையத்திலிருந்து...




காஞ்சிபுரம் பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளியில், 30-06-2026 அன்று பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டத்தில் சாதி ஒழிப்புப் பாடம் இடம்பெறுதல்' கருத்தரங்கம் நடைபெற்றது. காஞ்சி மாவட்டத்திராவிட இயக்கத் தமிழர் பேரவை நடத்திய இக்கருத்தரங்கில் மாவட்டச் செயலாளர் சாரதாதேவி தலைமையில் முனைவர் கு. இரவிக்குமார், பிரின்ஸ் கஜேந்திரபாபு ஆகியோர் கருத்துரை ஆற்றினார்கள்.



திராவிட இயக்கத் தமிழர் பேரவை, செங்கல்பட்டு மாவட்டத்தின் கலந்துரையாடல் கூட்டம் 30-06-2024 அன்று தாம்பரம் மோகன் இல்லத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அன்பு, உடகப் பிரிவுப் பொறுப்பாளர் செந்தாமரைக் கண்ணன, மாநில இளைஞரணித் துணைச் செயலாளர் இளமாறன், தாம்பரம் இளங்கோ, முத்துக்குமார், மானேக்ஷா, தம்பரம் மோகன், நன்முகில், மணிகண்டன், பிரபாகரன், நாகராஜன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துரையாடினார்கள்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian